# மக்கள் வங்கி - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 தொகுதி நிதிக் கூற்றுக்கள்

வங்கியின் நிதிக் கூற்றுக்கள் வங்கியின் அவசியமான பகுதிகளாக இருக்கின்ற உள் நாட்டின் வங்கியியல் பிரிவுகள், கடல்கடந்த வங்கியியல் பிரிவு மற்றும் வெளிநாட்டுச் செயற்பாடுகள் என்பவற்றினைக் கொண்டுள்ளது. தொகுதி நிதிக் கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்ஏஎஸ்) இணங்குகின்ற வங்கி, அதன் துணைக்கம்பனிகள் மற்றும் இணைந்த கம்பனிகள் என்பவற்றின் நிதிக் கூற்றுக்களின் திரட்டினைக் கொண்டுள்ளது. வங்கியானது ஐந்தொகையிலுள்ளவாறு வரையறுத்த பீப்பிள் ரவல்ஸ் (தனியார்) இல் 99 சதவீத பங்கு மூலதனம், வரையறுத்த பீப்பிள் லீசிங் (தனியார்) கம்பனியில் 75 சதவீத பங்கு மூலதனம், வரையறுத்த பீப்பிள் மேச்சன்ற் வங்கியில் 26.13 சதவீத பங்கு மூலதனம் மற்றும் வரையறுத்த ஸ்மாட்ர் நெற் லங்கா (தனியார்) இன் 37.3 சதவீத பங்கு முலதனம் என்பவற்றனைக் கொண்டுள்ளது.

முன்னைய ஆண்டுடன் ஒட்பிடப்பட்டு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒவ்வொரு கம்பனியிலும் வங்கியின் முதலீட்டு நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | முதலீடுகள் | | | |
|---|---|---|---|---|
| | 2011 | உரிமை யாண்மையின் | 2011 | உரிமை யாண்மையின் |
| **துணைக்கம்பனிகள்** | ரூபா 000 | % | ரூபா 000 | % |
| வரையறுத்த பீப்பிள் ரவல்ஸ் (தனியார்) | 4,950 | 99 | 4,950 | 100 |
| வரையறுத்த பீப்பிள் லீசிங் கம் (தனியார்) | 1,415,000 | 75 | 1,515,000 | 99 |
| | 1,419,950 | | 1,519,950 | |
| **இணைந்த கம்பனிகள்** | | | | |
| வரையறுத்த பீப்பிள் மேச்சன்ற் வங்கி | 273,100 | 26.13 | 155,500 | 26.13 |
| வரையறுத்த ஸ்மாட் நெற் லங்கா (தனியார்) | 25,000 | 37.3 | 25,000 | 37.3 |
| | 298,100 | | 180,500 | |
| வரையறுத்த ஸ்மாட் நெற் லங்கா (தனியார்) இற்கான ஏற்பாடு | (25,000) | | (25,000) | |
| | 273,100 | | 155,500 | |

## 1.2 அபிப்பிராயம்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மக்கள் வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல்கள் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் திரண்ட நிதிக்கூற்றுக்கள் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தும் தேவைப்படுகளன் அறிக்கை

1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் அதிகாரச் சட்டத்தால் வேண்டப்பட்ட தகவல்ககள் திரண்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதன் பின்னரான அவற்றுக்கான திருத்தங்கள் என்பவற்றின் ஊடாக சமர்ப்பிக்கப்ட்டிருந்தன.

## 1.4. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.4.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

தலைமை அலுவலக கட்டிடத்தின் முன்னரே ஆரம்பிக்கப்பட்ட மேற்கட்டுமானம் திடீரென கீழே விழுந்தமையால் வங்கியானது ஏனையவை கீழே விழுதலை தவிர்ப்பதற்கு தற்காலி ஆதார முறைமையை அமைப்பதற்கு ரூபா 4,563,357 ஆன தொகையை செலவழித்திருந்தது. இந்த கிரயம் மீளாய்வாண்டுக்கான வருமானத்திற்கு எதிராக சாட்டுதல் செய்யாமல் தவறுதலாக தொங்கல் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

## 1.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,353,080 தொகையான ஏனைய பொறுப்புக் கணக்குகளில் மீதிகள் அம்மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஏழு ஆண்டுகளாக அசையாதவையாக வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 5,908,121 ஆன கோரப்படாத உள்ளக வங்கி மீதி அவற்றினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாயவாண்டு இறுதியிலுள்ளவாறான கணக்குகளில் விடப்பட்டிருந்தது.

(இ) கிளைகளிற்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு தலைமை அலுவலகம் மற்றும் சகல கிளைகளாலும் பேணப்பட்ட இடைக்கால கணக்குகளிலுள்ள மீதிகள் ஒவ்வொன்றும் மற்றையவற்றுடன் சரிசெய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2011 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் ரூபா 75,380,636 ஆன வித்தியாசம் காட்டப்பட்டிருந்தது.

### 1.4.3. கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

| | கணக்கிலுள்ள விடயம் | தொகை<br>ரூபா | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|---|
| (i) | குத்தகை உடமை கணனிகள் | 1,107,880,145 | மெய்மையாய்வு அறிக்கைகள் அல்லது வேறு ஏதாவது ஆதார ஆவணங்கள் |
| (ii) | ஏனைய சொத்துக்கள் (பயிர்செய்கை கடன் தொடர்பாக மத்திய வங்கியிடமிருந்து பெறவேண்டியவை) | 28,220,003 | உறுதிப்படுத்தல்கள் அல்லது அதாரப்படுத்தும் ஆவணங்கள் |
| (iii) | ஏனைய சொத்துக்கள் (தொங்கல் கணக்கு- சீஆர்ஜபீ இற்கு செலுத்த வேண்டிய தொகை) | 2,157,087 | உறுதிப்படுத்தல்கள் அல்லது அதாரப்படுத்தும் ஆவணங்கள் |
| (iv) | ஏனைய சொத்துக்கள் (தொங்கல் கணக்கு- இலங்கை வங்கி 1) | 5,200,550 | அதாரப்படுத்தும் ஆவணங்கள் |
| (v) | மீள்நிதி கடன் பெறல் | 431,069,424 | உறுதிப்படுத்தல்கள் |
| (vi) | எதிர்கால பஸ் கடன் செயற்திட்டம் | 269,824,282 | கடன் உடன்படிக்கைகள் அல்லது ஏனைய வேறு அதாரப்படுத்தும் ஆவணங்கள் |
| (vii) | ஏனைய சொத்துக்கள் (தொங்கல் கணக்கு- ஈட்டு ஆதனங்கள்) | 751,939 | அதாரப்படுத்தும் ஆவணங்கள் |

### 1.4.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி அதிகாரச் சட்டம் | வங்கியின் அனுமதித்த பங்கு மூலதனம் 20,000,000 சாதாரண பங்குகளிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. வங்கியானது 999,960 பங்குகளை மாத்திரமே வழங்கியிருந்த போதிலும் ரூபா 7,152 மில்லியன் தொகையான பங்கீடு செய்யப்பட்டு மூலதனம் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு அதிமதித்த பங்கு மூலதனத்தை விஞ்சியிருந்த 143,040,000 பங்குகளிற்கு சமமாக இருந்தது. எவ்வாறாயினும், அதிகாரச் சட்டத்தின் மூலம் இன்னமும் அதிகரிக்க வேண்டியிருந்த அனுமதித்த மூலதனக் கணக்காக பங்கீடு செய்யப்படவுள்ள மூலதனக் கணக்கில் ரூபா 7,152 மில்லியன் இடம் பெற்றிருந்தது. |
| (ஆ) 2005 ஏப்ரல் 12 ஆம்திகதிய 02/17/402/0073/001 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்கள் | சகல அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளும் மத்திய வங்கியின் வழிகாட்டல்களின்படி 2007 இறுதியளவில் ரூபா 2,500 மில்லியன் வரை அவர்களுடைய மூலதனம் அதிகரிப்பதற்கு வேண்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இலங்கை மத்திய வங்கியானது அத்தேவைப்பட்ட மூலதனத்தை எய்தப்பட்டிருக்காத சில வங்கிகளிற்கு 2006 இறுதியளவில் குறைந்தது 50 சதவீதத்தால் தொகையை உயர்த்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், 2007 இறுதியளவில் ரூபா 2,500 மில்லியன் முழுமையாக எய்தப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் வங்கியானது தேவைப்பட்ட |

மூலதனத்தை அடைந்திருக்காததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த அப்பற்றாக்குறை ரூபா 2,450 மில்லியன் ஆகும்.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் செயற்பாடுகள் விளைவித்திருந்த முறையே ரூபா 15,311 மில்லியன் மற்றும் ரூபா 21,003 மில்லியன் வரிக்கு முந்நதிய தேறிய இலாபத்தை முன்னைய ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் முறையே ரூபா 8,771 மில்லியன் மற்றும் ரூபா 11,370 மில்லியன் நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபத்துடன் ஒப்பிடலாம். ஆதலால் வங்கி மற்றும் தொகுதியின் நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 6,540 மில்லியன் மற்றும் ரூபா 9,633 மில்லியனால் முன்னேற்றத்தைக் குறிக்கின்றது.

பின்வரும் அட்டவணை மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பல்வேறு கட்டங்களில் நிதிசார் விளைவுகளின் பொழிப்பைத் தருகின்றது.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | | |
|---|---|---|---|---|
| | 2011 | | 2010 | |
| | வங்கி ரூபா மில்லியன் | தொகுதி ரூபா மில்லியன் | வங்கி ரூபா மில்லியன் | தொகுதி ரூபா மில்லியன் |
| வட்டிவ வருமானம் | 61,822 | 74,115 | 56,534 | 64,559 |
| வட்டிச் செலவினம் | (31,703) | (37,454) | (30,636) | (33,929) |
| தேறிய வட்டி வருமானம் | 30,119 | 36,661 | 25,898 | 30,630 |
| ஏனைய வருமானம் | 7,003 | 6,823 | 5,998 | 6,368 |
| செயற்பாட்டு வருமானம் | **37,122** | **43,484** | **31,896** | **36,998** |
| செயற்பாட்டுச் செலவினம் | (20,351) | (22,991) | (21,305) | (23,386) |
| நட்டக் கடன் ஏற்பாடு மற்றும் கையாளுகின்ற பிணைகள்/ஏனையவைகளின் பெறுமதி வீழ்ச்சிக்கான ஏற்பாட்டிற்கு முன்னரான இலாபம் | 16,771 | 20,493 | 10,591 | 13,612 |
| நிதியேற்பாடு | (1,460) | 476 | (1,820) | (2,227) |

| | | | | |
|---|---|---|---|---|
| செயற்பாட்டு இலபாம் | **15,311** | **20,969** | **8,771** | **11,385** |
| வரிக்கு முன்னரான இணைந்த கம்பனிகள் இலாபப் பங்கு | - | 34 | - | (15) |
| வரிக்கு முன்னரான இலாபம் | **15,311** | **21,003** | **8,771** | **11,370** |
| வரிக்கான ஏற்பாடு | (5,153) | (7,068) | (3,565) | (4,788) |
| வரிக்கு பின்னரான இலாபம் | **10,158** | **13,935** | **5,206** | **6,582** |

### 2.1.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.1.2.1 துறைரீதியான கடன் வெளிப்படுத்தல்

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளின் துறை ரீதியான கடன் வெளிப்படுத்தல் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | துறை | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|
| (i) | மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூபா.மில்) | 478,345 | 371,804 | 299,077 | 263,462 |
| (ii) | வருடாந்த அதிகரிப்பு/ (வீழ்ச்சி) வீதம் | 28.6% | 24.3% | 13.5% | 3.9% |
| (iii) | அடைவு முற்பணங்கள் (ரூபா.மில்) | 186,994 | 133,299 | 97,534 | 89,288 |
| | அடைவு /மொத்த முற்பண விகிதம் | 39.1% | 35.9% | 32.6% | 33.9% |
| (iv) | விவசாயம் மற்றும் மீன் பிடி (ரூபா.மில்) | 30,781 | 29,204 | 34,442 | 3,307 |
| | விவசாயம் மற்றும் மீன் பிடித்தல் /மொத்த முற்பண விகிதம் | 6.4% | 7.9% | 2.1% | 1.3% |
| (v) | நிர்மாணம் (ரூபா.மில்) | 89,147 | 71,724 | 55,687 | 63,107 |
| | நிர்மாணம் / மொத்த முற்பண விகிதம் | 18.6% | 19.3% | 18.6% | 24% |
| (vi) | வியாபாரங்கள் (ரூபா.மில்) | 74,787 | 65,443 | 50,551 | 40,938 |
| | வியாபாரங்கள் / மொத்த முற்பண விகிதம் | 15.6% | 17.6% | 16.9% | 15.5% |
| (vii) | ஏனைய சேவைகள் (ரூபா. மில்) | 72,384 | 38,307 | 25,572 | 36,172 |
| | ஏனைய சேவைகள்/ மொத்த முற்பண விகிதம் | 15.1% | 10.3% | 8.6% | 13.7% |
| (viii) | கடன் அட்டை (ரூபா.மில்) | 932 | 834 | 875 | 906 |
| | கடன் அட்டை / மொத்த முற்பண | 0.2% | 0.2% | 0.3% | 0.3% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விகிதம் | | | | |
| (ix) | உற்பத்தியிடல் (ரூபா.மில்) | 14,023 | 23,014 | 21,912 | 15,099 |
| | உற்பத்தி / மொத்த முற்பண விகிதம் | 2.9% | 6.2% | 7.3% | 5.7% |
| (x) | சுற்றுலா (ரூபா.மில்)) | 3,509 | 3,200 | 4,287 | 4,496 |
| | சுற்றுலா / மொத்த முற்பண விகிதம் | 0.7% | 0.9% | 1.4% | 1.7% |
| (xi) | நிதி மற்றும் வர்த்தக சேவைகள் (ரூபா.மில்) | 5,003 | 4,375 | 5,344 | 4,764 |
| | எவ்பீஎஸ் / மொத்த முற்பண விகிதம் | 1.0% | 1.2% | 1.8% | 1.8% |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது வங்கியின் மொத்தக் கடன் வெளிப்படுத்தல் முன்னைய ஆண்டினை விட ரூபா 74,974 மில்லியன் அல்லது 28.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்தது. இந்த வளர்ச்சியில் அடைவு முற்பணங்கள் ரூபா 53,695 மில்லியன் குறிப்பிடத்தக்களவு பங்கைப் பங்களிப்புச் செய்திருந்த, அதேநேரம் மொத்த கடன் வெளிப்படுத்தல்களிற்கு ஏனைய சேவைகளைத் தவிர ஏனைய துறைகளின் பங்களிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி, வங்கியின் நோக்கம் இலங்கையில் கூட்டுறவு இயக்கம், கிராமிய வங்கி, விவசாயம் மற்றும் கைத்தொழில் என்பவற்றினை அபிவிருத்தி செய்து உதவியளிப்பதாக உள்ளது. எவ்வாறாயினும், கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி விவசாயம் மற்றும் மீன்பிடி, சுற்றுலா, உற்பத்தி, நிர்மாணம், வியாபாரம் மற்றும் ஏனைய சேவைகள் மற்றும் நிதி மற்றும் வர்த்தக சேவைகள் துறைகள் என்பவற்றிற்காக கடன் வசதிகளை ஊக்குவிப்பதற்கு வழங்கப்பட்ட கவனம் திருப்திகரமாக இல்லதா அதேநேரம் மொத்த கடன் தொகுதி 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது சீர்கெட்டிருந்ததுடன் அடைவு முற்பணங்களின் தொகுதி முன்னைய ஆண்டினை விட 39.1 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) வங்கி தொடர்பான கடன் உற்பத்திகளின் இலாபத்தன்மையின்படி, நுகர்வு அல்லது கடன் அட்டைகளின் முற்பணம் ஏனைய கடன் உற்பத்திகளுடன் ஒப்பிடும் போது மிகவும் உயர்வாக இருந்தது. எவ்வாறாயினும், மக்கள் வங்கியின் கடந்த நான்கு ஆண்டுகளின் போது மொத்த கடன் வெளிப்படுத்தல்களில் கடன் அட்டை நுகர்வு எவ்வித வளர்ச்சியும் இல்லாமல் 0.2 சதவீத மட்டத்தில் இருந்த போதிலும் மொத்த கடன் வெளிப்படுத்தல்கள்

குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காட்டியிருந்தது, அதேநேரம் தனியார் துறை வர்த்தக வங்கிகளின் மொத்த கடன் வெளிப்படுத்தல்களில் கடன் அட்டை நுகர்வு மொத்த கடன் வெளிப்படுத்தலில் 2 சதவீதத்திலும் பாரக்க அதிகளவு தொடர்ச்சியான வளர்ச்சியை காட்டுகிறது.

### 2.1.2.2 செயற்பாட்டு விளைவுகளின் பொழிப்பு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான செயற்பாட்டு விளைவுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | குறிகாட்டி | 2011 ரூபா. மில் | 2010 ரூபா. மில் | 2009 ரூபா. மில் | 2008 ரூபா. மில் |
|---|---|---|---|---|---|
| (அ) | மொத்த வருமானம் | 68,826 | 62,532 | 69,050 | 58,948 |
| | அதிகரிப்பு/ (வீழ்ச்சி) வீதம் | 10.1% | (9.5)% | 17% | 22.8% |
| (ஆ) | வட்டி வருமானம் | 61,822 | 56,534 | 62,341 | 53,454 |
| | அதிகரிப்பு/ (வீழ்ச்சி) வீதம் | 9.3% | (9.3)% | 16.6% | 24 |
| (இ) | வட்டிச் செலவினம் | 31,703 | 30,635 | 38,415 | 34,492 |
| | அதிகரிப்பு/ (வீழ்ச்சி) வீதம் | 3.5% | (20.3)% | 11.4% | 29.9% |
| (ஈ) | தேறிய வட்டி வருமானம் | 30,119 | 25,898 | 23,927 | 18,962 |
| | அதிகரிப்பு/ (வீழ்ச்சி) வீதம் | 16.29% | 8.23% | 26.18% | 15% |
| (உ) | வேறு செயற்பாட்டு வருமானம் | 7,004 | 5,998 | 6,708 | 5,495 |
| | அதிகரிப்பு/ (வீழ்ச்சி) வீதம் | 16.8% | (10.6)% | 22.1% | 11.9% |
| இ (ஊ) து | தேறிய வருமானம் | 37,123 | 31,897 | 30,635 | 24,456 |
| | அதிகரிப்பு/ (வீழ்ச்சி) வீதம் | 16.4% | 4.1% | 25.3% | 14% |
| ெ (எ) த | செயற்பாட்டுச் செலவினம் | 20,352 | 21,305 | 19,719 | 17,159 |
| ா | அதிகரிப்பு/ (வீழ்ச்சி) வீதம் | (4.5)% | 8% | 14.9% | 9.1% |
| ட (ஏ) ர | செயற்பாட்டு இலாபம்/ (நட்டம்) | 15,311 | 8,771 | 6,076 | 5,664 |
| . | அத்கரிப்பு வீதம் | 74.6% | 44.3% | 7.3% | 13.2% |
| ப (ஐ) | வரிக்குப் பின்னரான இலாபம் | 10,157 | 5,206 | 3,320 | 2,705 |
| ல | அதிகரிப்பு வீதம் | 95.1% | 56.8% | 22.8% | 13.9% |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் மொத்த வட்டி வருமானம் ரூபா 61,822 மில்லியனாக இருந்தது. அதேநேரம் மொத்த வட்டிச் செலவினம் ரூபா 31,703 மில்லியனாக உள்ளன. முன்னைய ஆண்டினைவிட மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவினத்தின் அதிகரிப்பு வீதம் முறையே 9.3 சதவீதம் மற்றும் 3.5 சதவீதமாக இருந்தது. வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவினத்தின் இச் சாதகமான அதிகரிப்புக்கான பிரதான காரணம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ரூபா 6,540 மில்லியன் அல்லது 74.6 சதவீதத்தால் செயற்பாட்டு இலாப அதிகரிப்புக்கு வழிவகுத்த மீளாய்வாண்டின் போது வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல் வட்டி வீதத்தின் தளமாக இருந்தமையாகும்.

(ii) வங்கியின் ஏனைய வருமானம் கட்டணம் மற்றும் தரகு வருமானம் மற்றும் பங்கிலாப வருமானம் மற்றும் ஐயக் கடன் அறவீடுகள் என்பவற்றினையே பிரதானமாக கொண்டுள்ளது. மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானம் கட்டணம் மற்றும் தரகு வருமானம் மற்றும் பங்கிலாப வருமானத்தின் அதிகரிப்பு காரணமாக பிரதானமாக ரூபா 1,006 மில்லியனால் அதிகரித்திருந்தது.

### 2.1.2.3 கிளைச் செயலாற்றல் மற்றும் இலாபத்தன்மை

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 339 கிளைகளில் 331 கிளைகள் ஒதுக்கப்பட்ட செலவினத்திற்கு முன்னர் ரூபா 16,799.04 மில்லியன் மொத்த இலாபத்தை பதிவுசெய்வதற்கு முடிந்திருந்த அதேநேரம் 8 கிளைகள் ரூபா 28.42 மில்லியன் மொத்த நட்டத்தை பதிவு செய்திருந்தது. மருதமுனை, புல்மோட்டை, தம்பலா, கரப்பிட்டிய, ரன்னா, வீரகெட்டிய, பல்லேபெட்ட, மெல்சிறிபுர மற்றும் படல்கும்பற என்பன அத்தகைய கிளைகளாக இருந்தன.

ஒரு ஊழியருக்கான மீள ஒதுக்கப்பட்ட செலவினத்திற்கு முன்னர் வலய மற்றும் பிராந்திய ரீதியான இலாபம் தொடர்புபட்டனர் மேல் வலயம் ஒரு ஊழியருக்கு ரூபா 3.67 மில்லியன் உயர்வான இலாபத்தை பதிவு செய்திருந்த அதேநேரம் தெற்கு வலயம் ரூபா 1.49 மில்லியன் குறைவான இலாபத்தை பதிவு செய்திருந்தது. அதேபோல கொழும்பு தெற்குப் பிராந்தியம் ஒருவருக்கு ரூபா 6.28 மில்லியன் உயர்ந்த இலாபம் பதிவு செய்திருந்த அதேநேரம் பொலநறுவைப் பிராந்தியம் ஒருவருக்கு ரூபா 1.20 மில்லியன் குறைவான இலாபத்தை பதிவு செய்திருந்தது. தலைமை அலுவலக கிளையில் ஒருவருக்கு ரூபா 29.24 மில்லியன் உயர்வான இலாபம் பதிவு செய்திருந்த அதேநேரம் ஊர்காவற்றுறை கிளை ஒருவருக்கு ரூபா 0.17 மில்லியன் உயர்வான இலாபத்தை பதிவு செய்திருந்ததுடன் வீரஹெட்டிய கிளை ஒருவருக்கு ரூபா 0.94 மில்லியன் உயர்ந்த நட்டமத்தை பதிவு செய்திருந்தது.

2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் வலய ரீதியான கிளை வலையமைப்பு மற்றும் அவற்றின் இலாபத்தன்மை என்பன கீழே தரப்படுகின்றன.

| **வலயம்** | **கிளைகளின் எண்ணிக்கை** | **ஊழியர்களின் எண்ணிக்கை** | **மொத்த இலாபம் ரூபா மில்லியன்** | **ஒரு ஊழியருக்கான இலாபம் ரூபா மில்லியன்** |
|---|---|---|---|---|
| மத்திய வலயம் | 39 | 927 | 1,633.58 | 1.76 |
| கிழக்கு வலயம் | 29 | 587 | 1,298.48 | 2.21 |
| வட மத்திய வலயம் | 27 | 533 | 870.02 | 1.63 |
| தெற்கு வலயம் | 41 | 853 | 1,274.16 | 1.49 |
| சப்ரகமுவ வலயம் | 31 | 507 | 986.37 | 1.94 |
| மேல் வலயம் 1 | 58 | 1,305 | 4,790.58 | 3.67 |
| மேல் வலயம் II | 38 | 892 | 2,788.95 | 3.13 |
| வயம்ப வலயம் | 31 | 782 | 1,619.67 | 2.07 |
| வடக்கு வலயம் | 20 | 370 | 682 | 1.84 |
| ஊவா வலயம் | 25 | 477 | 883.65 | 1.85 |
| **மொத்தம்** | **339** | **7233** | **16,827.47** | |
| **கழி:-** மீள ஒதுக்கப்பட்ட செலவினம் | | | (11,773.80) | |
| **மீள ஒதுக்கப்பட்ட செலவினத்திற்கு பின்னரான இலாபம்** | | | ------------ **5,053.67** ======== | |

## 2.1.2.4 வங்கியின் கடன் பெறுகைகள்

2011 ஆண்டு இறுதியிலுள்ளவாறு வங்கியின் மொத்தக் கடன் பெறுகைகள் முன்னைய ஆண்டினைவிட ரூபா 26,071 மில்லியன் அல்லது 71 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் வங்கியின் வட்டிச் செலவினம் ரூபா 1,067 மில்லியன் அல்லது 3.48 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்திருந்தது. வங்கி அழைப்புப் பண கடன்பெறுகைகள் 2011 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா 38,657 மில்லியனால் அதிகரித்திருந்தது, அதேநேரம் ஏனைய கடன்பெறுகைகள் (திறைசேரி உண்டியல்கள்/ முறிகள்/ கடன்பத்திர மீள்கொள்வனவுகள்) ரூபா 13,007 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனவே எதிர்வரும் ஆண்டுகளில் வங்கியினுடைய வட்டிச் செலவினம் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கலாம். அது வங்கியின் இலாபத்தன்மையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

2011 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கியினுடைய மொத்தக் கடன் பெறுகைகள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2011 ரூபா மில்லியன் | 2010 ரூபா மில்லியன் | முரண் ரூபா மில்லியன் | % |
|---|---|---|---|---|
| **மீள் நிதி கடன்பெறுகைகள்** | | | | |
| இலங்கை மத்திய வங்கி | 3,065 | 2,734 | 331 | 12.1 |
| நிதி நிறுவனம் | 764 | 674 | 90 | 13.3 |
| **நீண்ட கால கடன்பெறுகைகள்** | | | | |
| நிதி நிறுவனம் | 270 | 270 | - | - |
| **ஏனைய கடன்பெறுகைகள்** | | | | |
| அழைப்பு பண கடன்பெறுகைகள் | 42,342 | 3,685 | 38,657 | 1049 |
| திறைசேரி உண்டியல்கள்/ முறிகள்/ கடன்பத்திர மீள்கொள்வனவுகள் | 16,307 | 29,314 | (13,007) | (44.3) |
| **மொத்தக் கடன்பெறுகைகள்** | **62,748** | **36,677** | **26,071** | |

### 2.1.2.5 வாடிக்கையாளரிடமிருந்தான வைப்புக்கள்

வாடிக்கையாளரிடமிருந்தான வைப்புக்களைக் கவரக்கூடிய வட்டி வீதங்களில் வாடிக்கையாளர் சிநேக பூர்வ வசதிகளுடன் வங்கியின் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக வாடிக்கையாளரின் சேமிப்புக்கள் மற்றும் கால வைப்புக்களில் அதிகரிப்புக் காரணமாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 16.8 சதவீதத்தால் வாடிக்கையாளரின் வைப்புக்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. தொடங்கப்பட்ட ஊக்குவிப்பு பிரச்சாரங்களும் இந்த அதிகரிப்புக்கான பங்களிப்பைச் செய்திருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியிலுள்வாறான வாடிக்கையாளர் வைப்புக்களின் நிலைமை கீழே தரப்படுகின்றன.

| வைப்புக்களின் வகை | 2011 ரூபா மில்லியன் | 2010 ரூபா மில்லியன் | முரண் ரூபா மில்லியன் | % |
|---|---|---|---|---|
| கேள்வி வைப்புக்கள் | 42,521 | 40,617 | 1,904 | 4.7 |
| சேமிப்பு வைப்புக்கள் | 232,339 | 203,004 | 29,335 | 14.5 |
| கால வைப்புக்கள் | 252,009 | 215,107 | 36,902 | 17.1 |
| வைப்புச் சான்றிதழ்கள் | 413 | 244 | 169 | 69.3 |
| ஏனைய வைப்புக்கள் | 12,579 | 3,168 | 9,411 | 297.1 |
| **மொத்த வைப்புக்கள்** | **539,862** | **462,141** | **77,721** | **16.8** |

### 2.1.2.6 கடன்கள் மற்றும் முற்பணங்கள்

(அ) செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 5 மில்லியனிற்கு மேலான 127 செயற்பாடற்ற கடன் தொகுதியின் மொத்த நிலுவை ரூபா 5,863,158,802 ஆக உள்ளது. (ரூபா 4,075,167,312 ஆன முதல் மற்றும் ரூபா 1,787,991,490 ஆன வட்டி உள்ளடங்கலாக)

(ii) 2012 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 5 மில்லியனிற்கு மேலான 45 செயற்பாடற்ற வகுதி மேலதிகப்பற்றின் மொத்த நிலுவை ரூபா 1,490,538,623 ஆக உள்ளது. (ரூபா 793,787,125 ஆன முதல் மற்றும் ரூபா 696,751,499 ஆன வட்டி உள்ளடங்கலாக)

(iii) மீளாய்வாண்டிற்காக நட்டக் கடன்களாக பதிவழிக்கப்பட்ட மொத்த செயற்பாடற்ற கடன்களான ரூபா 510.45 மில்லியனை முன்னைய ஆண்டிற்கான ரூபா 316.32 மில்லியனுடன் ஒப்பிடும் போது முன்னைய ஆண்டினை விட ரூபா 194.13 மில்லியன் அல்லது 61.37 சதவீதம் அதிகரிப்பை காட்டுகின்றது.

(ஆ) கடன்கள் மற்றும் மேலதிகப்பற்று நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முற்பணங்களிற்கு எதிராக வழங்கப்பட்ட ஈட்டு ஆதனங்களின் கட்டாய விற்பனை பெறுமதியை (எவ்எஸ்வீ) மதிப்பாய்வு செய்கின்ற போது வெளிவாரி மதிப்பாய்வாளர் குழுவின் அறிக்கையோ அல்லது உள்ளக மதிப்பாய்வாளரின் அறிக்கையோ அல்லது வங்கியின் மதிப்பாய்வு குழுவின் தீர்மானமோ பிணை வைப்பின் கட்டாய விற்பனை பெறுமதியை தீர்மானிப்பதில் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருந்தது என்பபதனை வங்கி தெளிவாக இனங்காண்பதற்கு தவறியிருந்தது. வங்கியால் வங்கியின் மூலதன அடிப்படை ரூபா 5 மில்லியன் அல்லது 0.1 சதவீதத்திற்கு சமமான அல்லது அதற்கு மெலாகவுள்ள வெளிப்படுத்தலில் எது குறைவாகவுள்ளதோ அதில் கடன்கள் மற்றும் முற்பணங்களிற்கு எதிராக வழங்கப்பட்ட பிணைகள் தொடர்பில் வெளிவாரி மதிப்பீட்டாளர்களிடமிருந்து மதிப்பாய்வு அறிக்கைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

(ii) கூட்டிணைந்த வங்கியியல் பிரிவுக் கிளை கண்டி நகரக் கிளையை நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக முறையே 2009 சனவரி 30 மற்றும் 2009 சனவரி 27 இல் வாடிக்கையாளர் ஒருவரிற்கு ரூபா 245 மில்லியன் மேலதிகப்பற்று வசதி மற்றும் ரூபா 150 மில்லியன் காலக்கடன் என்பவற்றை வழங்கியிருந்தது. 2009 ஏப்ரல் மாதத்தின் பின்னர், மேலதிகப்பற்று மற்றும் காலக்கடன் என்பன செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலதிகப்பற்றின் மொத்த நிலுவையாக இருந்த மீதி 2011 யூலை 30 இல் உள்ளவாறான ஈட்டு ஆதனத்தின் கட்டாய விற்பனைப் பெறுமதியை விஞ்சி ரூபா 415,540,137 ஆக இருந்ததுடன் எல்லைக் கணக்கின் பெறுமதி ரூபா 32,537,249 ஆக இருந்தது (ஈட்டு ஆதனத்தின் மொத்தப் பெறுமதி ரூபா 367,500,000 ஆக இருந்ததுடன் எல்லைக் கணக்கு மீதி ரூபா 15,502,888 ஆக இருந்தது). மேலும், மேற்குறிப்பிட்ட கம்பனியின் மூன்று பணிப்பாளர்களின் தனிப்பட்ட உத்தரவாதத்தில் வழங்கப்பட்டிருந்த 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த செயற்பாடற்ற காலக் கடன் நிலுவை மீதி ரூபா 252,195,501 ஆக இருந்தது. எவ்வாறாயினும், நிலுவையாகவிருந்த வங்கி மேலதிகப்பற்று மற்றும் கடன் மீதிகளை அறவிடுவதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாடிக்கையாளர் ஒருவரின் நிலுவையாகவிருந்த மொத்த செயற்பாடற்ற கடன் மீதி ரூபா 24,804,866 ஆக இருந்தது. எவ்வாறாயினும், கிளையானது 2009 பெப்ரவரி 02 இல் செயற்பாடற்ற தொகுதிக்கு கடனை மாற்றிய திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளிற்கு மேல் காலாவதியாகியிருந்த போதிலும் நிலுவையாகவிருந்த மீதியை அறவிடுவதற்கு தவறியிருந்தது. மேலும், கிளையானது மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு ஏழு வாடிக்கையாளர் இனங்காணல் இலக்கங்களை (சீஐஎவ்) வழங்கியிருந்தது.

(iv) கூட்டிணைந்த வங்கியியல் பிரிவு 2004 இலிருந்து வாடிக்கையாளர் ஒருவருக்கு நாணயக் கடிதம் (எல்சீ) மற்றும் குறுகியகாலக் கடன் (எஸ்ரீஎல்) மற்றும் வங்கி உத்தரவாதங்கள் என்பனவாக பின்வரும் கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்கியிருந்தது. கொடுப்பனவுகள் காலாவதியாகியமை காரணமாக, வங்கியானது ரூபா 151.3 மில்லியன் மீள் பட்டியலிட்ட கடன்பொதி மற்றும் ரூபா 8.84 மில்லியன் மூலதனமாக்கப்பட்ட கடன் வட்டி அஎன்பவற்றை ங்கீகரித்திருந்தது. கிளையானது 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 62.70 மில்லியன் தொகையான 09 குறுகிய காலக் கடன்கள் மற்றும்

நாணயக்கடிதம் (எல்சீ) வசதிகளை மேலும் வழங்கியிருந்த அதேநேரம் 2009 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 30.9 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான ஏழு செயற்பாடற்ற குறுகிய காலக் கடன்களிலிருந்தும் 2011 யூன் 01 ஆன கணக்காய்வுத் திகதியளவில் 2011 இல் செய்யப்பட்ட மதிப்பாய்வின்படி ரூபா 14 மில்லியனால் ஈட்டு ஆதனத்தின் கட்டாய விற்பனைப் பெறுமதியை (எவ்எஸ்வீ) விஞ்சியதாக ரூபா 169,724,603 ஆக இருந்தது. (ரூபா 165,031,045 ஆன முதல் மற்றும் ரூபா 4,693,558 ஆன வட்டி) எவ்வாறாயினும் நிலுவையாகவிருந்த மீதிகளை அறவிடுவதற்கு நேரகாலத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) கூட்டிணைந்த வங்கியியல் பிரிவு 2011 யூலை 13 இல் வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூபா 54,000,000 மற்றும் ரூபா 571,685,701 தொகையான மேற்படி இரண்டு கடன்களை வழங்கியிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு கடன்களின் மொத்த நிலுவையாகவிருந்த செயற்பாடற்ற கடன் மீதிகள் முறையே ரூபா 37,803,541 மற்றும் ரூபா 510,731,512 ஆக இருந்தது. கடன்களிற்கு ரூபா 152,000,000 பெறுமதியான அசையா சொத்துக்கள் மற்றும் ரூபா 419,685,701 தனிப்பட்ட உத்தரவாதம் என்பவற்றை பிணையாக வைக்கப்பட்டது. மேலும் மதிப்பாய்வின்படி, முதலாவது கடனிற்கான பிணை ஆதனத்தின் கட்டாய விற்பனை பெறுமதி ரூபா 132 மில்லியனாகும், ஆனால், 2011 சனவரி 4 இல் கிளையால் கடன் குழு நிறைவேற்றுச் சபைக்கு அனுப்பிய கடன் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 11 மில்லியனால் மதிப்பாய்வாளருடைய மதிப்பாய்வை விஞ்சிய ரூபா 143 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், நிலுவையாகவிருந்த மீதியை அறவிடுவதற்கு நேரகாலத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2011 மார்ச் 04 இல் கூட்டிணைந்த அறவீடுகள் உதவி பொது முகாமையாளரால் பிரதி பொது முகாமையாளருக்கு (சீ மற்றும் ஐபீ) முகவரியிடப்பட்ட கடிதத்தின்படி, ரூபா 8,222,166 தொகையான கடன் மற்றும் வங்கி மேலதிகப்பற்றின் மொத்த நிலுவையை 2011 மார்ச் 31 அன்று அல்லது அதற்கு முன்னர் முழுவதையும் வாடிக்கையாளர் தீர்ப்பனவு செய்யவேண்டும். வாடிக்கையாளர் நிலுவையை தீர்ப்பனவு செய்யத் தவறினால், தீர்ப்பனவு செய்யப்படும் வரை ஒரு நாளிற்கு ரூபா 7,500 ஆன தொகை சாட்டுதல் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், வாடிக்கையாளர் 2012 யூன் 01 இல் வரைவுக் கணக்காய்வின் போதும் மொத்த நிலுவைத் தொகையை தீர்ப்பனவு செய்திருக்கவில்லை. மேலும் கிளையானது வங்கிப் பிரமாணங்களின்படி தண்டப்பணத்தை சாட்டுதல் செய்திருக்கவில்லை.

(vii) கிளையொன்று 2011 யூன் 07 இல் ஒரு வாடிக்கையாளருக்கு வங்கி மேலதிகப்பற்று வசதியை வழங்கியிருந்தது. அதன்பின்னர் இது 2008 ஒக்தோபர் 03 இல் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா 1,999,500 ஆக இருந்தது. எவ்வாறாயினும், கிளையானது 2009 ஒக்தோபர் 22 இல் மீள்பட்டியலிட்ட பின்னர் கூட நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(viii) கூட்டிணைந்த வங்கியியல் பிரிவு தனிப்பட்ட உத்தரவாதத்தில் வாடிக்கையாளர் ஒருவருக்கு வங்கி மேலதிகப்பற்று வசதியை வழங்கியிருந்ததுடன் பின்னர் 2009 ஏப்ரல் 02 இல் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தியிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா 5,461,688 ஆக இருந்தது. எவ்வாறாயினும், கிளையானது 2012 யூன் 21 வரையும் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(xi) கூட்டிணைந்த வங்கியியல் பிரிவு 2007 யூன் 06 இல் வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூபா 38,000,000 வங்கிமேலதிகப்பற்று வசதியை வழங்கியிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா 28,964,041 ஆக இருந்தது. மக்கள் வங்கி பணிப்பாளர் சபை 2010 மார்ச் 26 இல் நடைபெற்ற அவர்களுடைய கூட்டத்தில் ஈடுவைக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரத்தை பொது ஏல விற்பனையில் விற்பனை செய்வதன் மூலம் நிலுவைகளை அறிவிடுவதற்கு தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், 2012 யூலை 31 வரையும் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு கிளையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(x) கூட்டிணைந்த வங்கியியல் பிரிவு 2008 பெப்ரவரி 22 இல் வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூபா 37.9 மில்லியனிற்காக 360 நாட்கள் பயன்படுத்தக்கூடிய பட்டியல் நாணயக்கடிதத்தை வழங்கியிருந்ததுடன் ரூபா 72 மிலியனின் (எவ்எஸ்வீ) பெறுமதியான ஈடுவைக்கப்பட்ட சொத்தின் பிணையுடன் 2008 ஏப்ரல் 11 இல் ரூபா 10.8 மில்லியன் தொகையான இன்னொரு கடனை அனுமதித்திருந்தது. அதன்பின்னர் ரூபா 46,214,990 ஆன கடன் நிலுவை 2009 மே 11 இல் (ரூபா 39,870,990 நிலுவை முதல் மற்றும் ரூபா 6,344,000 வட்டி) செயற்பாடற்ற வகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது. கீழே காட்டப்பட்டவாறு 2006 திசெம்பர் மற்றும் 2008 சனவரியில் செய்யப்பட்ட இரண்டு மதிப்பீடுகளுக்கும் இடையில் கருத்திற்கொள்ளத்தக்க முரண்கள் மேலும் அவதானிக்கப்பட்டது.

| | எவ்எஸ்வீ | | |
|---|---|---|---|
| மதிப்பீட்டாளர் | 2006 திசெம்பர் | 2008 சனவரி | முரண் |
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| வங்கி மதிப்பீட்டாளர் | 35.0 | 72.0 | 37.0 |
| குழு மதிப்பீட்டாளர் | 37.5 | 80.0 | 42.5 |

(xi) ஹம்பாந்தோட்டை வங்கிக் கிளை 1999 மார்ச் 23 இல் வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூபா 3,000,000 ஆன கடன் வழங்கியிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த தொகை ரூபா 8,412,137 ஆக இருந்தது. வெள்ளிக்கரை உள்ளக வங்கியியல் முறைமையின்படி, கடன் வழங்கப்பட்ட திகதி மற்றும் செயற்பாடற்ற வகுதிக்கு மாற்றப்பட்ட திகதி என்பன 1999 மார்ச் 23 ஆன ஒரே திகதியாக இருந்தது. மேலும், இலங்கை கடன் உத்தரவாத திட்டத்தின் கீழ் வங்கியானது மத்திய வங்கியிடமிருந்து ரூபா 1,682,942 பெற்றிருந்ததென மேலும் வெளிப்பட்டது. எவ்வாறாயினும், வங்கிக் கிளையானது வாடிக்கையாளர் அல்லது பிணையாளர்களிடமிருந்து இருக்கின்ற நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(xii) ஹம்பாந்தோட்டை வங்கிக் கிளை 2005 செப்தெம்பர் 16 இல் வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூபா 600,000 கடனை வழங்கியிருந்தது. பின்னர் வாடிக்கையாளரால் கடன் திருப்பிச் செலுத்துகைகள் தவறவிடப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 927,450 ஆக இருந்தது. எவ்வாறாயினும் கிளையானது ஈடுவைத்த சொத்தினை (காணி) ஏல விற்பனை செய்வதன் மூலம் வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டியவற்றினை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(xiii) புறக்கோட்டை வங்கிக் கிளை வாடிக்கையாளர் ஒருவருக்கு 2004 ஒக்தோபர் 21 இல் ரூபா 340,000 மற்றும் ரூபா 240,000 தொகையான இரண்டு நம்பிக்கை பெறுவனவு கடன்களை (ரீஆர்) வழங்கியிருந்தது. அந்தக் கடன்கள் 2005 யூன் 30 இல் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. கிளையானது நிலுவையாகவிருந்த தொகையை அறவிடுவதற்கு 2009 இல் சட்ட நடவடிக்கையை தொடங்கியிருந்த பேதிலும் அதன்பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு கடன்களில் மொத்த நிலுவையாகவிருக்கின்ற தொகை முறையே ரூபா 713,715 மற்றும் ரூபா 552,831 ஆக இருந்தன.

(xiv) லிபேட்டிப் பிளாசா வங்கிக் கிளை 2007 செப்தெம்பர் 19 இல் வாடிக்கையாளர் ஒருவருக்கு வங்கி மேலதிகப்பற்று வசதியினை வழங்கியிருந்தது. அதன்பின்னர், வங்கி மேலதிகப்பற்று வசதி 2009 மே 06 இல் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 2,712,219 ஆக இருந்தது. எவ்வாறாயினும் கிளையானது வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டியவற்றினை அறவிடுவதற்கு தவறியிருந்தது. மேலும், வாடிக்கையாளர் புதிய முகாமையின் கீழ் இராஜகிரிய நகரத்தில் அவருடைய வியாபாரத்தை மாற்றியிருந்தார்.

(xv) கிளையொன்று 2011 ஆகஸ்ட் 17 இல் வாடிக்கையாளர் ஒருவருக்கு வங்கி மேலதிகப்பற்று வசதியினை வழங்கியிருந்ததுடன் மொத்த நிலுவைத் தொகை ரூபா 687,473 ஆக இருந்தது. (ரூபா 351,449 வட்டி உள்ளடங்கலாக). நீதி மன்றம் 2010 செப்தெம்பர் மாதத்தில் வழக்குத் தொடர்பில் தீர்ப்பினை வழங்கியிருந்த போதிலும் (நீதி மன்ற வழக்கு இல. 3284) நீதி மன்றத் தீர்ப்பு கணக்காய்விற்கு கிடைத்திருக்காததுடன் நிலுவை மீதி அறவிடப்படாமல் இருந்தது. தலைவரின் கருத்துப்படி நீதி மன்றத் தீர்ப்பு சொத்துக்களை பறிமுதல் செய்யதற்காக இருந்தது. எவ்வாறாயினும், சொத்துக்கள் வாடிக்கையாளர் பெயரில் இருப்பதை தேடிக் கண்டுகொள்ள முடியாதிருந்தது என்பதாகும்.

## 2.6 முதலீடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விலைகூறப்பட்ட முதலீடுகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 41 விலைகூறப்பட்ட கம்பனிகளின் உரிமை மூலதனம் கையாளும் பிணைகளில் வங்கியால் செய்யப்பட்ட முதலீட்டின் மொத்தக் கிரயம் ரூபா 885 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் 2011 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான சந்தைப் பெறுமதி அதே திகதியில் அத்தகைய பிணைகளின் சந்தைப் பெறுமதி ரூபா 869 மில்லியனாக மாத்திரமேயாக இருந்தமை ரூபா 16 மில்லியனால் நட்டமடைந்திருந்தது.

(ஆ) விலை கூறப்படாத முதலீடுகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 விலைகூறப்படாத கம்பனிகளில் வங்கியால் செய்யப்பட்ட முதலீடுகளின் மொத்தக் கிரயம் ரூபா 1,310 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2011 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான அத்தகைய முதலீடுகளின் சந்தைப் பெறுமதி அதே திகதியில் மதிப்பீடு ரூபா 413 மில்லியனாக இருந்தமையால் ரூபா 897 மில்லியனால் நட்டமடைந்திருந்தது.

## 3. முறைமைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது வங்கியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நெஸ்ரோ இணக்கங்கள்
(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகள்
(இ) அடைவுபிடித்தல்
(ஈ) முதலீடுகள்
(உ) கடன்கள் மற்றும் முற்பணங்கள்
(ஊ) தகவல் முறைமை
(எ) மனித வள முகாமைத்துவம்
(ஏ) கிளைச் செயற்பாடுகள்
(ஐ) சொத்துக்கள் முகாமைத்துவம்